# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 666/2016/பேரு

ஆணை எண்: 116/2017

நாள்: 20/05/2017

திரு. A. மிதுன் சக்கரவர்த்தி
த/பெ. V.P. அம்மாவாசை,
9/7/4, காமாட்சியம்மன் கோவில் தெரு,
பழனிசெட்டிபட்டி
தேனி மாவட்டம் –625 531. – முறையீட்டு மனுதாரர்

1. திரு. T. பாலசுப்பரமணியன்,
   முன்னாள் தலைவர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.
2. திரு. உதய சூரியன்
   பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.
3. செயல் அலுவலர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனிமாவட்டம். – எதிர் மனுதாரர்கள்

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, காமாட்சியம்மன் கோவில் தெரு, கதவு எண்.9/7/4-ல் வசிக்கும் திரு. A. மிதுன் சக்கரவர்த்தி என்பவரின் பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.18803/2015/இ2 நாள்: 01.07.2016-ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டு 11.07.2016 அன்று பெறப்பட்ட 19/1/2015 நாளிட்ட முறையீட்டு மனுவும் மற்றும் உரிய படிவத்தில் 5/8/2016 அன்று பெறப்பட்ட 3/8/2016 நாளிட்ட இரண்டு முறையீட்டு மனுக்களும், 666/2016 என்னிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, நேரடி விசாரணையில் பெறப்பட்ட வாக்குமூலம் மற்றும் ஆதார ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

# ஆணை

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியை சேர்ந்த திரு. A. மிதுன் சக்கரவர்த்தி என்பவர் தனது முறையீட்டு மனுவில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு. T. பாலசுப்பிரமணியன் என்பவர் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியது, போலி ஆவணங்கள் தயாரித்தது, பேரூராட்சிக்கு வருமான இழப்பு ஏற்படுத்தியது போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து முறையிட்டுள்ளார். திரு. T. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு ச.எண்.1432/3-ல் பழனி செட்டிபட்டி பேரூராட்சி, பெரியகுளம் - குமுளி சாலையில் சுமார் 3501 ச.அடியில் நிலம் உள்ளதாகவும், மேற்படி இடத்தில் ஏற்கனவே 1034 ச.அடியில் ஒரு கட்டிடம் உள்ளதாகவும், அந்த நிலத்தில் 1982.12 ச.அடியில் வணிக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதாகவும், ஆனால் முன்னாள் தலைவர் அவர்கள் அங்கு 2966 ச.அடியில் ஒரு வணிக கட்டிடம் கட்டியுள்ளதாகவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வாடகை ஒப்பந்த பத்திரத்தில் 2272.93 ச.அடி என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் 1432/3-ல் உள்ள மொத்த கட்டிடத்தின் அளவு சுமார் 2966 ச.அடியில் உள்ளது என்றும் 1982.12 ச.அடியில் மட்டுமே கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என போலி அறிக்கை தயாரிக்கப்பட்டு மேற்படி 1982.12 ச.அடிக்கு மட்டும் வரி விதிப்பு எண்.5819-ன்படி பேரூராட்சி தலைவர் பெயரில் ரூபாய் 5233/- மட்டும், நூலக வரி ரூபாய் 523/-ஆக மொத்தம் ரூபாய் 5756/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அன்றைய தினமே வசூல் செய்யப்பட்டு, மேற்படி வரி ரசீதை வைத்து மேற்படி கட்டிடத்தினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு மாதம் ரூபாய் 30,000/-க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றும் நகர் (ம) ஊரமைப்புத் திட்ட சட்டம், 1971 மற்றும் மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920-ன் படியும் செயல் அலுவலர் அவர்களுக்கு 2000 ச.அடி வரையிலான கட்டிடங்களுக்கே அனுமதி வழங்க அதிகாரம் உள்ளதால், குறைத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்து அனுமதியில் கண்ட 1982 ச.அடியில் மட்டுமே கட்டிடம் உள்ளது என காட்டி வரிநிர்ணயமும் செய்து வாங்கியுள்ளார் என்றும் உண்மையாக கட்டப்பட்டுள்ள 2966 ச.அடிக்கு வரி நிர்ணயம் செய்தால் பேரூராட்சிக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றும் ஆனால் பேரூராட்சி தலைவர் பேரூராட்சிக்கு வருமான இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்றும் முறையிட்டுள்ளார்.

2. மேலும், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் பழனி செட்டிபட்டி பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் திரு. உதய சூரியன் அவர்கள் தனக்கு சொந்தமான வீரபாண்டி கிராம ச.எண்.43 மற்றும் 44-ல் 17.2.2014 நாளிட்ட ந.க.எண்.101/2013-14 என்ற கடிதம் மூலம் கட்டிட வரைபடம் அங்கீகாரம் செய்யப்பட்டு தரைத்தளம் 296.12 ச.அடி வணிக கட்டிடம், 1404.88 சதுர அடியில் குடியிருப்பு கட்டிடம், முதல் தளம் 1701 ச.அடியில் வணிக கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார் என்றும் ஆனால் திரு. உதய சூரியன் அவர்கள் வரைபடத்திற்கு மாறாக கூடுதல் கட்டுமானமாக இரண்டு மற்றும் மூன்றாம் தளங்களை கட்டியுள்ளார் என்றும் முறையீட்டு மனுதாரரின் புகாரின் அடிப்படையில் பழனிசெட்டிபட்டி செயல் அலுவலர் அவர்களால் கட்டுமானப் பணிகளை நிறுத்தும்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றும் ஆனால் தனது புகாரின் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே திரு. உதய சூரியன் அவர்கள் தரைத்தளத்தில் வணிகக்கட்டிடம் 296.12 ச.அடி மற்றும் குடியிருப்பு கட்டிடம் 1404.88 ச.அடி, முதல் தளத்தில் வணிக கட்டிடம் 300 ச.அடி மற்றும் குடியிருப்பு கட்டிடம் 1404 ச.அடி ஆகிய அளவுகளில் உள்ளதாக குறிப்பிட்டு, வரிவிதிப்பு எண்கள் 5762 முதல் 5777 வரை உள்ளதில் ரூபாய் 4729/- வரியாக நிர்ணயிக்கப்பட்டு அன்றைய தினமே வசூலும் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் தனது புகாரின் பேரில் ஆய்வு நடத்தப்பட்ட போது தரைத்தளத்தில் 567 ச. அடியில் வணிக கட்டிடமும், முதல் தளத்தில் 12 தனித்தனி அறைகள் மற்றும் 1701 ச.அடியில் வணிக கட்டிடம் உள்ளதாக தெரியவந்தது என்றும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி துணைத் தலைவர் திரு. உதயசூரியன் அவர்கள் கட்டிட வரைபடத்திற்கு மாறாக விதிகளை மதிக்காமல் கட்டிடம் கட்டியது, மேற்படி கட்டிடங்கள் வரைபடத்தின் படியே கட்டப்பட்டுள்ளதாக போலியாக அறிக்கை தயார் செய்ய வைத்தது, வணிக கட்டிடமாக உள்ள கட்டிடத்திற்கு குடியிருப்பு

கட்டிடம் என போலி ஆவணங்கள் மூலம் குறைத்து வரி நிர்ணயம் செய்ய வைத்தது பேரூராட்சிக்கு வருமான இழப்பு ஏற்படுத்தியது அனைத்தும் தேனி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் வாயிலாக நிரூபணமாகிறது என்றும் மேற்படி குற்றச் செயல்கள் யாவும் மாவட்ட நகராட்சிகள் சட்டவிதிகளுக்கு புறம்பானவை என்றும், அவர் மீது குற்றவியல் சட்டப் படி நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

1. இம்முறையீடு குறித்து இம்மன்றமன்ற நடுவ 9.8.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்பட்டது. 31.08.2016 நாளிட்ட தனது அறிக்கையில், பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்:-

*"தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் திரு. து.பாலசுப்பிரமணியம், த/பெ. துளசிநாதன் (சேர்மன்) என்பவர் 25.10.2011 முதல் நாளது தேதி வரை பேரூராட்சி மன்ற தலைவராக பதவி வகித்து வருகிறார். தனியருக்கு இவ்வலுவலக கட்டிட வரைபட அனுமதி எண்.39/2001-02 நாள் 02.08.2001ன் படி வீரபாண்டி கிராம சர்வே எண்.1432/3ல் தரைத்தளம் 517 சதுரடியும், முதல்தளம் 517 சதுரடியும் ஆக மொத்தம் 1034 சதுரடி அளவில் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி அனுமதி காலம் 01.08.2004ல் முடிவடைந்ததால் மீண்டும் 3 வருட காலத்திற்கு கட்டிட அனுமதி புதுப்பிக்கப்பட்டது. மேற்படி கால நீட்டிப்பு செய்த காலம் 31.07.2007ந் தேதியுடன் முடிவடைந்தது. இந்நிலையில் திரு. அ. மிதுன் சக்கரவர்த்தி த/பெ. அய்யாசாமி (மனுதாரர்) என்பவரது 24.11.2014ம் தேதிய புகார் மனுவின் பேரில் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் திரு. து. பாலசுப்ரமணியம் (சேர்மன்) என்பவருக்கு தங்களால் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தின் தற்போதைய நிலை மற்றும் அதன் பயன்பாடு குறித்து விபரத்துடன் ஏன் நாளது தேதி வரை வரி விதிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான விளக்கத்தினை 30 தினங்களுக்குள் எழுத்து மூலமாக சமர்ப்பித்திட தெரிவித்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.449/2014/அ2 நாள். 25.11.2014ன்படி கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்தினை பெற்றுக்கொண்ட தனியர் தனது 24.12.2014ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே 03.05.2006ம் நாள் வீட்டு வரி நிர்ணயம் செய்திட கோரி மனு அனுப்பியதாகவும், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தனது பணியின் காரணமாக வெளியூர் சென்றுவிட்டதால் இப்பொருள் மீது கவனம் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது என தெரிவித்துள்ளார்.*

*மேலும், பேரூராட்சியின் மூலம் 2008ல் பொது சீராய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது தனது கட்டிடத்தையும் பொது சீராய்வின் போது வரி வசூல் செய்யும் பணியாளர்கள் ஆய்வு செய்தார்கள் எனவும், ஆய்வின்படி தனது கட்டிடத்திற்கு வரி நிர்ணயம் செய்யப்பட்டுவிடும் என வரிவசூல் பணியாளர்கள் தெரிவித்ததாகவும். அதனால் அக்கட்டிடத்திற்கு வரி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் என நினைத்து தான் கவனம் செலுத்தாமல் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.*

*மேலும், ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட கட்டிடத்தினை 2006 முதல் வணிக பயன்பாடாக மாற்றம் செய்து பயன்படுத்தி வருவதாகவும், எனவே மேற்படி கட்டிடங்களுக்கு வணிக பயன்பாட்டிற்கான வரியினை கடந்த 2006ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை நிர்ணயம் செய்து செலுத்த கோரப்பட்டதில் செலுத்த தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.*

*மேலும் இது தொடர்பாக திரு. மிதுன் சக்கரவர்த்தி த/பெ. அய்யாசாமி (மனுதாரர்) என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P. (MD). 2253/2015ன் படி வழக்கு தொடுக்கப்பட்டு நாளது தேதி வரை வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.*

மேலும் மேற்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்ட காலங்களிலும், கட்டிட அனுமதி கால நீட்டிப்பு செய்த காலங்களிலும் மற்றும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக கட்டிடத்தின் உரிமையாளரான திரு. நு. பாலசுப்ரமணியம் (சேர்மன்) என்பவர் பேரூராட்சி தலைவராக பதவி வகிக்கவில்லை. ஆனால் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு வரி நிர்ணயம் செய்த காலமான 27.11.2014ல் தனியர் இப்பேரூராட்சி மன்ற சேர்மன் ஆக பதவியில் உள்ளார். 2011ம் ஆண்டு நகர்புற உள்ளாட்சி தேர்தலில் பேரூராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிடும் போது வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த உறுதிமொழி (Affidavit) ஆவணத்தில் தனக்கு சர்வே எண்.1432/3Aல் 8 சென்ட் அளவில் வணிகத்திற்கான கட்டிடம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், பழனி–செட்டிபட்டி பேரூராட்சியில் திரு. பொ. உதயசூரியன் என்பவர் 18.10.2006 முதல் 24.10.2011 முடியவும் மற்றும் 29.10.2011 முதல் நாளது தேதி வரையிலும் பேரூராட்சி மன்ற உதவிச் சேர்மனாக பதவி வகித்து வருகிறார்.

தேனி மாவட்டம்வட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பகுதி வீரபாண்டி கிராமம் சர்வே எண்.43 மற்றும் 44 குமுளி பெரியகுளம் தேசிய நெடுஞ்சாலை அருகாமையில் திரு.உதயசூரியன் த/பெ. பொக்கத்தேவர் (உதவிச்சேர்மன்) மற்றும் திருமதி. முருகேஸ்வரி க/பெ. உதயசூரியன் ஆகியோருக்கு இவ்வலுவலக கட்டிட அனுமதி எண்.101/2013–14 நாள். 17.02.2014ல் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட கலம் எண்.2ல் குறிப்பிட்ட விபரப்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தனியர் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு முரணாக கலம் எண்.3ல் குறிப்பிட்ட விபரப்படி கட்டிடம் கட்டியுள்ளார்கள்.

| வ.எண் | அனுமதி வழங்கியது | அனுமதிக்கப்பட்ட அளவுக்கு முரணாக கட்டப்பட்ட அனுமதியற்ற கட்டுமானம் / கட்டிடம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தரைத்தளம் 296.12 சதுரடி (வணிக கட்டுமானம்) | வணிகக் கட்டுமானம் 1134 சதுரடி |
| 2. | தரைத்தளம் 1404.88 சதுரடி (குடியிருப்புக் கட்டுமானம்) | குடியிருப்புக் கட்டுமானம் 567 சதுரடி |
| 3. | முதல்தளம் 1701 சதுரடி (வணிக கட்டமானம்) | வணிகக் கட்டுமானம் 1704 சதுரடி இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம்தளம் கட்டுமானங்கள் முழுவதும் |

மேற்குறிப்பிட்ட விபரப்படி அனுமதிக்கப்பட்ட அளவினை விட கூடுதலாக தனியரால் அனுமதியற்ற கட்டுமானத்தினை அகற்றி அனுமதிக்கப்பட்ட அளவிற்கு கொண்டு வர இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.305/2014 நாள். 14.10.2014, 10.11.2014, 24.11.2014, 22.01.2015, 11.02.2015, 26.02.2015 மற்றும் 20.05.2015ன்படி பலமுறை அறிவிப்பு செய்யப்பட்டும், தனியர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

மேலும், தனியரால் விதிமீறலுடன் கூடிய கட்டிடத்திற்கு அனுமதி வழங்கிட கோரி நகர் ஊரமைப்புத்துறைக்கு வழங்கப்பட்ட விண்ணப்பமானது நகர் ஊரமைப்பு துறை மண்டல துணை இயக்குநர் அவர்களது கடிதம் ந.க.எண்.2825/2014 மகச நாள்.22.01.2015ன் படி அனுமதியற்ற

கட்டுமானம் விதிமீறலுடன் உள்ளபடியாலும், ஏற்கனவே உள்ளாட்சியால் தரைத்தளம் மற்றும் முதல் தளத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தள கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கிட இயலாது என தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விதிகளுக்கு புறம்பாக தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளக் கட்டிடங்கள் கட்டியுள்ளதினை ஆட்சேபித்து திரு. அ. மிதுன்சக்கரவர்த்தி த/பெ. அம்பாலவாசை (மனுதாரர்) என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்கில் மாண்பமை நீதிமன்றம் தனது 09.12.2014ம் தேதிய நீதிப்பேராணையில்

In the mean while, it is open to the respondents 1 to 4 look into the representations of the petitioner dated 07.10.2014 and 03.12.2014 and to take such action as they deem fit and proper considering the allegation relating to illegal construction and misappropriation of funds of the public as averred by the petitioner in his writ affidavit

என தெரிவித்துள்ளது.

மேலும் நகர் ஊரமைப்புத்துறை மண்டல இயக்குநர் அவர்கள் தமது 15.10.2015ம் தேதிய கடிதம் ஒ.மு.எண் 2247/2015 மஅ3-ல் அரசாணை (Ms) எண்.289 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு (UD 4-1) துறை நாள் 16.12.2010ன் படி அனுமதியற்ற கட்டுமானங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்து திரு. மொ. உதயசூரியன் (உ.தமிழ்ச்செல்வன்) மற்றும் திருமதி உ. முருகேஸ்வரி ஆகியோரால் சர்வே எண்.43 மற்றும் 44ல் கட்டப்பட்ட கட்டுமானங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை தெரிவித்திட கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலக கடிதங்கள் ந.க.எண்.305/2014 நாள். 05.04.2016, 2.5.2016 மற்றும் 18.05.2016 மூலம் அனுமதியற்ற மற்றும் விதிமீறல்களுடன் கூடிய கட்டுமானத்தை, கட்டுமானம் மேற்கொள்வதற்கு முன்பிருந்த நிலைக்கு மனையை கொண்டு வர கட்டுமான உரிமையாளர்களுக்கு பதிவு அஞ்சல் ஒப்புகையுடன் கூடிய சட்டப்பூர்வ (Statutory Notice) அறிவிக்கை செய்யப்பட்டது.

மேற்படி கடிதங்கள் மற்றும் அறிவிக்கையை பெற்றுக்கொண்ட கட்டுமானத்தின் உரிமையாளர்கள் (திரு. மொ. உதயசூரியன் மற்றும் திருமதி உ. முருகேஸ்வரி) நாளது தேதி வரை அனுமதியற்ற கட்டுமானத்தினை பூட்டுதல் மற்றும் முத்திரையிடல் உள்ளிட்ட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால், மேற்படி கட்டுமானங்கள் மீது நகர் ஊரமைப்புத் துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.305/2014 நாள்.20.06.2016ன்படி வேண்டப்பட்டதில் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்கள் கடிதம் ந.க.எண்.862/2016 மஅ3 நாள்.29.06.2016ல் பொருளில் கண்டுள்ள அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது பேரூராட்சி செயல் அலுவலர் அளவிலேயே தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை தெரிவித்திட கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி அனுமதியற்ற கட்டுமானத்தினை 12.09.2016ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் பூட்டி முத்திரையிட உத்தேசிக்கப்பட்டு காவல் துறை பாதுகாப்பும், வருவாய் துறை மூலம் உரிய ஒத்துழைப்பு வழங்கிட தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு உரிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

4. முறையீட்டு மனு குறித்து இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.666/பே/2016 நாள்: 5.10.2016 வாயிலாக 3.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி மனுதாரர் திரு. எ. மிதுன்சக்கரவர்த்தி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"3.8.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் அனுப்பப்பட்டது. பழனிசெட்டிபட்டி தலைவர் திரு.டி.பாலசுப்ரமணியன் என்பவர் மீதும் இன்னொன்று பழனி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் திரு.உ.தயபசூரியன் என்பவர் மீதும் இருவேறு முறையீட்டு மனுக்கள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டது. வீரபாண்டி கிராமம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி சர்வே எண்.1432/3ல் 1982 சதுரடியில் 2012 ஆம் ஆண்டு வணிகக் கட்டிடத்திற்கு கட்டுவதற்கு பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு அளித்தார். அந்த கட்டிடம் கட்டுவதற்கு செயல் அலுவலர் வரைபடத்திற்கு அங்கீகாரம் அளித்தார். பேரூராட்சி தலைவர் அங்கீகாரத்திற்காக கொடுத்த வரைபடத்தில் 1982 சதுரடி கோரியிருந்தார்கள். ஆனால் உண்மையில் 3016 சதுரடியில் கட்டிடம் கட்டியிருந்தார்கள். பேரூராட்சி தலைவர் குறைவான அளவு காண்பித்து ஒப்புதல் பெற்றதற்கு காரணம், செயல் அலுவலருக்கு 2000 சதுரடி வரை மட்டுமே கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்க அதிகாரம் உள்ளது. வரி விதிப்பு 1982 சதுரடிக்கு மட்டுமே விதிக்கப்பட்டது. நான் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலருக்கு 2014 நவம்பர்-ல் இதுகுறித்து ஒரு விரிவான கடிதம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பியிருந்தேன். என்னுடைய கடிதத்திற்கு பின்பு பேரூராட்சி உதவியாளரை அனுப்பி கட்டிட ஸ்தல ஆய்வு செய்யுமாறு அனுப்பியிருந்தார். ஸ்தல ஆய்வு அறிக்கையில் 3016 சதுரடி கட்டிடம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு பிறகு சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர், அதன் மீது வரி விதிப்பு மாற்றமோ, அங்கீகாரமில்லாத கட்டிடம் குறித்தோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேரூராட்சி இயக்குநருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பேரூராட்சி இயக்குநர் எனக்கு எந்த வித கடிதம் அனுப்பவில்லை.

பேரூராட்சி தலைவர் 2012ஆம் ஆண்டு கட்டிடம் கட்டுவதற்காக அங்கீகாரம் பெறுவதற்காக செயல் அலுவலரை விளரித்தார். ஆனால் 2011ம் ஆண்டு உள்ளாட்சி அமைப்பு தேர்தல் நடத்தும் போது அவருடைய சொத்து விபரத்தில் தனக்கு சம்பந்தப்பட்ட சர்வே எண்.1432/3-ல் 2800 சதுரடியில் வணிக கட்டிடம் உள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இதே சொத்தை 2987 சதுரடியில் ஒரு கட்டிடம் கட்டப்போவதாகவும், அதற்காக இந்த மனையை அடமானம் வைத்து ரூ.12 இலட்சம் கடன் வாங்கியுள்ளார். அதே கடன் வாங்கியிருந்த அதே வங்கிக்கு 28.2.2016ல் குத்தகைக்கு ரூ.39,328/- விட்டு அந்த குத்தகை பத்திரத்திலும் 2272 சதுரடி கட்டிடம் எனவும் அதனுடைய சந்தை மதிப்பு 92 இலட்சம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே 2001ல் சர்வே எண்ணில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரியுள்ளார். இதில் குடியிருப்பு கட்டிடம் என அவர் 1034 சதுரடியில் அனுமதி பெற்றுள்ளார். அதனுடைய கடித நகலும் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். இவர் 2001ல் ஏற்கனவே அங்கீகாரம் பெற்று கட்டிடம் கட்டியதற்கு வரிவிதிப்பே செய்யாமல் இருந்தது. அதை முறைப்படுத்துவதற்காகவே 2012ல் வணிகக் கட்டிடமாக போட்டு உண்மை அளவைவிட குறைவாக பேரூராட்சி செயல் அலுவலரிடம் அதிகார வரம்பிற்காக குறைவாக அளவீடு செய்துள்ளார். 2012ல் வழங்கிய 1982 சதுரடிக்குரிய அங்கீகாரத்திற்கு மட்டும் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. 2001ல் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு வரி விதிப்பு செய்யவில்லை.

2012–ஆம் ஆண்டு அவர்கள் சமர்ப்பித்த வரைபடம் போலியானதற்கு காரணம் ஏற்கனவே அங்கு கட்டிடம் 2960 சதுரடியில் உள்ளது. அந்த அளவுகள் படி வரி விதிப்பு செய்யப்பட்டது ஒரு முறைகேடானது ஆகும்.

இந்த பேரூராட்சியில் துணைத் தலைவராக திரு. உதய சூரியன் என்பவர் இருந்தார். வீரபாண்டி கிராமம் பழனிச்செட்டிபட்டி பேரூராட்சி 43, 44 சர்வே எண்களிலும் திரு.உதய சூரியன் பேரிலும், மனைவி திருமதி.ஜெயலட்சுமி பெயரிலும் 1448.44 சதுரடியில் குடியிருப்பு முதல் தளம் 1701 சதுரடியில் வணிக கட்டிடம் மற்றும் தரை தளம் 296.12 சதுரடியில் கட்டப்பட்டது இந்த அளவுகளில் கட்டுவதற்கு வரைபடம் பேரூராட்சியில் சமர்ப்பித்தார்கள். ஆனால் உண்மையில் கட்டப்பட்டது தரைதளத்தில் 567 சதுர அடியில் வணிகக் கட்டிடமும் முதல் தளத்தில் 12 தனித்தனி அறைகளாக 1701 சதுரடி வணிகக் கட்டிடமும் உள்ளது. இதுபோக அனுமதியில்லாமல் 3ஆம் மற்றும் 4ஆம் தளம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் மாவட்ட ஆட்சித்தலைவர் கடிதம் நாள் 13.1.2015ன்படி பக்கம் 4ல் தரை தளம் 1701 சதுரடி எனவும் முதல் தளம் 1704 சதுரடி எனவும் வரி விதிப்பு உள்ளது எனவும், ஆனால் உண்மையிலேயே தரைதளத்தில் 296.12 சதுரடி வணிக கட்டுமானமும் 1448 பரப்பளவில் குடியிருப்பு கட்டுமானமும் கட்டிக்கொள்ள அனுமதி பெற்றுள்ளதாகவும் ஆனால் வரி விதிப்பு வணிக கட்டிடம் 567 சதுரடி எனவும் குடியிருப்பு கட்டுமானம் 1134 சதுரடி எனவும் உள்ளதாகவும், இது அங்கீகாரம் பெற்ற நிலைக்கு முரணானது எனவும் இதனால் நிதி இழப்பும் விதிமீறல்களும் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

துணைத் தலைவர் மீது 2014 ஆண்டு ஒரு வழக்கும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு வழக்கும் தொடர்ந்தேன். அதுகுறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 9.12.2014ல் ஒரு தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தாததால் என்னால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் ஏற்கனவே அளித்த தீர்ப்பாணையை நடைமுறை-படுத்துவதாக செயல் அலுவலர் கொடுத்த உறுதிமொழியின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கை முடித்து வைக்க ஆணையிட்டது. தற்போது எந்த நீதிமன்றத்திலும் இதுகுறித்து வழக்கு எதுவும் இல்லை.

பேரூராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் போலியான ஆவணங்களை தயாரித்து உள்ளாட்சி அமைப்பை ஏமாற்றி விதிகளை மீறி உள்ளாட்சி அமைப்புக்கு நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். எனவே இவர்கள் இருவர் மீதும் குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே தவறாக வரி விதிப்பு செய்த செயல் அலுவலரின் ஆணையை ரத்து செய்து உண்மையில் எவ்வளவு அளவிற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதோ அதற்கு உரிய வரிவிதிப்பு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். விதி பாதிப்புடன் உள்ள கட்டிடங்களின் செயல்பாட்டினை முறைப்படுத்தும்வரை அவை செயல்பட தடை விதிக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

5. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 7.12.2016 அன்று நடைபெற்ற விசாரணைக்கு செயல் அலுவலர் அவர்கள் அழைக்கப்பட்டார். செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:-

"நான் 23.10.2015 முதல் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியினுடைய செயல் அலுவலராக இருக்கிறேன். திரு.எ.விஜய் அமிர்தராஜ் அவர்களுடைய 3.8.2016 நாளிட்ட குற்றச்சாட்டு எனக்கு தெரியும். பேரூராட்சியினுடைய முன்னாள் தலைவர் திரு.பாலசுப்ரமணியன் என்பவர் மீது குற்றச்சாட்டுகள் சொல்லியிருக்கிறார். சர்வே எண்.1432/3ல் 2250 சதுரடி நிலம் உள்ளது. பேரூராட்சியிலிருந்து குடியிருப்புக்காக தரை தளத்தில் 517 சதுரடியும் முதல் தளத்தில் 517 சதுரடியும் கட்டுவதற்கு

அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தரைதளம் முதல் தளம் இரண்டையும் சேர்த்து 2250 சதுரடியில் வணிகக்கட்டிடமாக கட்டியுள்ளார். ஆனால் பேரூராட்சி அனுமதி அளித்தது குடியிருப்பான கட்டிடம் கட்டதான். ஏற்கனவே ஒரு சிறிய கடை ஒன்று 10 x 10 ஒரு கடை உள்ளது. அந்த கடைக்கு பின்புறத்தில் இருந்த காலி இடத்தில் அந்த கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் பேரூராட்சியிலிருந்து ஏற்கனவே உள்ள கட்டிடத்தை விரிவுபடுத்துவதாக கொடுத்துள்ளார்கள். இதற்கு காமாட்சி என்பவர் அனுமதி வழங்கியுள்ளார். அவர் தற்போது ஓய்வு பெற்று ஆண்டிபட்டியில் உள்ளார். மனுவில் சொன்னதுபோன்று இரண்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது அனுமதி வழங்கிய போது திருத்திய வரைபட அனுமதிக்கப்பட்டு ஒரே அனுமதி அளிக்கப்பட்டது. 1034 சதுரடிக்கு மட்டும் சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. அவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வாடகைக்கு விட்டுள்ளார். திருத்திய சொத்துவரி செய்யப்படவில்லை. இதற்கிடையில் மனுதாரர் சென்னை நீதிமன்றம் மதுரை கிளையில் ஒரு வழக்கு தொடர்ந்தார். தேர்தலை மனதில் கொண்டு இந்த வழக்கு தொடரப்பட்டது குறித்து ரூ.25,000/- அவருக்கு அபராதம் விதித்தார். தற்போது உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திருமுனிய்முகமது மைதீனிடம் இதுகுறித்து அறிவுரை கோரப்பட்டது. ஆனால் வீட்டின் உரிமையாளர் பேரூராட்சிக்கு வழங்க வேண்டிய வரியை அபராதத்துடன் கட்டுவதாக மனு செய்துள்ளார். நீதிமன்ற ஆணையை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

பேரூராட்சியினுடைய துணைத்தலைவர் பற்றியும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி பெற்றதை விட அதிகமாக விதிகளை மீறி கட்டிடம் கட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்தும் அவர் வழக்கு தொடர்ந்தார். சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. அந்த நீதிமன்றத்தின் நகலும் இத்துடன் சமர்ப்பித்துள்ளோம். 17.2.2014ல் இதுபோன்று அனுமதி வழங்கப்பட்டது. தரை தளத்தில் 296.12 அது வணிகமாக 104 சதுரடியில் வணிகக்கட்டிடமாக கட்டியுள்ளார். அதே தரைதளத்தில் 1404.88 சதுரடியில் குடியிருப்பு கட்டுமானம் என அனுமதி பெற்று குடியிருப்பு 567 சதுரடியாக கட்டியுள்ளார். முதல் தளத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை. போக 2வது, 3வது மாடியில் தலா 1204 சதுரடியில் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியுள்ளார்.

17.2.2014ல் திரு.செந்தில்குமார் (தற்போது வடுகப்பட்டி செ.அ), கருத்தமுணர் (வீரபாண்டிய பேரூராட்சி) இந்த காலத்தில் பணிபுரிந்துள்ளார். வாசுகை, இளநிலை உதவியாளர், தற்போது இதே பஞ்சாயத்தில் பணிபுரிகிறார், திரு.ராமசாமி (ஓய்வுபெற்றுவிட்டார்). சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையின்படி நாங்கள் செயல்படவில்லை என தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்தார். உடனே நடவடிக்கை எடுக்குமாறு சீல் வைக்க நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டி 12.9.2016ல் மாவட்ட ஆட்சி தலைவருக்கு நாங்கள் விண்ணப்பித்துள்ளோம் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அந்த அனுமதிக்கு பிறகு நாங்கள் சீல் வைக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்தார்.

6. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக, முறையீட்டு மனுதாரின் வாக்குமூலம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், அவர்களின் கடிதம் நக.எண்.0787/பே3/ நாள்:13/1/2015 ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில், இந்நேர்வில் விதிகளை மீறி கட்டிட அனுமதிக்கு மீறி அதிகமாக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. அனுமதியின்றி, அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலான சதுரடியில் கட்டிடத்தினை கட்டி முடிக்கும் வரையில் பேரூராட்சி பணியாளர்கள்/செயல் அலுவலர்கள் யாரும் ஆய்வு செய்யாது பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்துள்ளனர். எனவே மேற்படி இழப்பிற்கு காரணமாக இருந்த செயல் அலுவலர் மற்றும்

பணியாளர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. மேலும், இந்நேர்வில் மேற்படி விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கையை விரைந்து முடித்து இரண்டு மாதங்களுக்குள் மேற்படி நடவடிக்கை அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறு செயல் அலுவலரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள் 20–ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. A. மிதுன் சக்கரவர்த்தி,
   த/பெ. V.P. அம்மாவாசை,
   9/7/4, காமாட்சியம்மன் கோவில் தெரு,
   பழனிசெட்டிபட்டி,
   தேனி மாவட்டம் –625 531.

2. திரு. பாலசுப்பரமணியன்,
   முன்னாள் தலைவர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.

3. திரு. உதய சூரியன்
   பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.

4. செயல் அலுவலர்,
   பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.

நகல்
உதிரி - 4